[1972 டிசம்பர் 6

Labour dispute in Modern Bakeries, Limited.

* 49 *Q.*—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether it is a fact that the dispute between the workers and the management of Messrs. Modern Bakeries, Limited, Madras, has been referred to adjudication about 25th February 1972 ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :(அ) ஆம்.

(இ) சென்னையில் உள்ள "மாடர்ன்" பேக்கரிஸ் தொழிலாளர் சங்கம் கோரிக்கைப் பட்டியல் ஒன்றையொட்டி 20—1—1972-ல் வேலை நிறுத்த அறிவிப்பு விடுத்தது. தொழிலாளர் நல அதிகாரியால் உடன்பாடு உருவாகிவரும்போது தொழிலாளர் இருவரை மீண்டும் வேலையில் சேர்த்துக்கொள்ள நிர்வாகம் மறுத்ததால் மனக்குறையுற்ற தொழிலாளர்கள் 19—2—1972-லிருந்து வேலைநிறுத்தம் செய்தனர். தொழிலாளர் இருவரை மீண்டும் வேலையில் சேர்த்துக்கொள்ளாதது பற்றிய பிரச்சினையை அரசு 22—2—1972 நாளிட்ட தமது ஆணையில் நடுவர் மன்றத் தீர்ப்புக்கு அனுப்பி வேலைநிறுத்தம் தொடர்வதைத் தடை செய்தது. தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர். இச்சங்கம் எழுப்பிய மீதமுள்ள இருபத்தி எழு கோரிக்கைகளைப் பொறுத்த மட்டில், 8 கோரிக்கைகள் அரசால் 14—4—1972 நாளிட்ட அவர்களது ஆணைகளில் நடுவர் மன்றத் தீர்ப்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பத்தொன்பது கோரிக்கைகள் குறித்து நடுவர் மன்றத் தீர்ப்புக்கு அனுப்ப அரசு மறுத்துவிட்டது.

Buildings for Service Homes.

* 50 *Q.*—Thiru R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state the steps taken by the Women's Welfare Department to acquire lands to house the Service Homes for Women in this State ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : 1970-ஆம் ஆண்டில் தஞ்சாவூரில் மகளிர் பணி இல்லத்திற்கான கட்டிடம் கட்டுவதற்கென்று புதுப்பட்டினம் கிராமத்தில் நாஞ்சிக் கோட்டை சாலையில் T.S. எண். 3330 இன் 1·81 ஏக்கர் பரப்புள்ள நிலம் ரூ. 26,070·54 செலவில் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்து துறையிடமிருந்து வாங்கப்பட்டது. கடலூரில் பணி இல்லத்திற்கான கட்டிடம் கட்டுவதற்கென்று கடலூர் நகரத்தில் வில்வராயநத்தம் கிராமத்தைச் சேர்ந்த T.S. எண். 2400–இல் 2 ஏக்கர் 17947 சதுர அடி பரப்புடைய நிலம் 1972 மார்ச்சில் வாங்கப்பட்டுள்ளது.

1972 டிசம்பர் 6]

திரு. ரா. ரா. முனுசாமி : தஞ்சாவூர், கடலூர் ஆகிய இரண்டு இடங்களில் மட்டும் மகளிர் பணி இல்லத்திற்காக இடங்கள் வாங்கப் பட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எல்லா மாவட்டங்களிலுமே வாங்கி மகளிர் பணி இல்லங்களை அமைக்க அரசு முன்வருமா ? மு. 9-3

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : நமது மாநிலத்தில் மகளிர் பணி இல்லங்கள் தாம்பரத்திலும், தஞ்சாவூரிலும், கடலூரிலும் தான் இப்போது இருக்கின்றன. தாம்பரத்தில் உள்ளது சொந்த இடத்தில் இருக்கிறது. ஆகவே சொந்த இடம் இல்லாத கடலூர், தஞ்சாவூருக்காகத் தான் இப்போது நிலம் வாங்கப்பட்டது. மாவட்டத்திற்கு ஒன்று என்று ஏற்படுத்துகிற திட்டம் இப்போது இல்லை.

அரிசன நல வாரியங்கள்.

*51 வினா.—திரு. என். கிட்டப்பா, திரு. என். கே, பழனிசாமி : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தை தீவிரமாக அமுல் படுத்த கிராமப்புறங் களில் தனி அமைப்புகளை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தை தீவிரமாகச் செயல்படுத்த வட்ட, மாவட்ட மாநில நிலைகளில் அரிசன நல வாரியங்களை நிறுவ அரசு ஆணையிட்டுள்ளது. இவ்வாரியங்களுக்கு அங்கத்தினர்களை நியமனம் செய்வது பற்றி செயற் குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளது.

திரு. என். கிட்டப்பா :—தீண்டாமை ஒழிப்புச் சட்டம் அமல்படுத்தப் பட்டு வருகின்ற நிலைமை இருந்தாலும் பல கிராமங்களில் தீண்டாமை அனுசரிக்கப்பட்டே வருகிறது. எனவே ஒவ்வொரு கிராம பஞ்சாயத் திற்கும் ஒரு அதிகாரி என்ற முறையில் இல்லாவிட்டாலும் கிராம பஞ்சாயத்துக் குழுக்களை நியமித்து தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தை மிகத் தீவிரமாக அமல் படுத்த அரசு ஆலோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அந்தக் காரணத்தையொட்டித் தான் இந்த நல வாரியத்தை அரசு ஏற்படுத்தியிருக்கிறது. கிராமத்திற்கு ஒருவர் என்று பொறுக்கி, பிறகு பிர்காவுக்கு ஒருவர் என்று பொறுக்கி, பிறகு தாலுக்காவிற்கு ஒருவர், மாவட்டத்திற்கு ஒருவர் என்பதாக பொறுக்கி இந்த வாரியம் அமைக்கப்பட்டிருக்கின்றது.

திரு. வை. பாலசுந்தரம் : துணைத்தலைவர் அவர்களே, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இளையபெருமாள் குழு அளித்த ரிப்போர்ட் மத்திய அரசால் நம் அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டதா ? அதன் அடிப்படையில் நம் அரசு அளித்த பரிந்துரை என்ன ?